# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1969/57 - 2016 ජුනි මස 03 වැනි සිකුරාදා - 2016.06.03

*1969/57 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 8/2016*

**(417 ஆம் அத்தியாயமான) உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம்**

(417 ஆம் அத்தியாயமான) உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள்.

ரவி கருணாநாயக்க,
நிதி அமைச்சர்.

கொழும்பு,
2016, யூன் 03.

ஒழுங்குவிதிகள்

2009 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதிய 1607/18 ஆம் இலக்க, அதி விஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதிகள் அதன் 9 ஆம் ஒழுங்குவிதியில் பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது:-

1. அதன் (1) ஆம் பந்தியில் "(417 ஆம் அத்தியாயமான) உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்படும் பொதுக்கடன் பதிவாளர், மத்திய வங்கி சார்பில்" என்ற சொற்களுக்கும், இலக்கங்களுக்கும் பதிலாக, "(422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் நியதிகளின்படி நியமிக்கப்படும் மத்திய வங்கியின் வங்கியல்லா நிதிசார் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர்" என்ற சொற்களையும், இலக்கங்களையும் இடுவதன் மூலம் ; அத்துடன்

2. அதன் பந்தி (2) இல் உள்ள "பொதுப்படுகடன் பதிவாளருக்குக்" என்ற சொற்களுக்குப் பதிலாக "வங்கியல்லா நிதிசார் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளருக்குக்" என்ற சொற்களை இடுவதன் மூலம்.

6- 636



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.